முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1458

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.09.2023**, செவ்வாய்கிழமை

1. கலியிடர் வெல்ல வந்த குருவே
கலியுகத்தைக் காக்க வந்த குருவே
அழியாமை தந்து உலகோர்க்கு
அற்புதங்கள் நடத்த அவதாரம் புரிந்த ஞானகுருவே
2. குருஅரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
கூறிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 09 ம் நாள், 26.09.2023, செவ்வாய்கிழமை)
திருவருள் பெற வேண்டி உலகோர்
தேடிவரவேண்டும் தேசிகன் பிரணவக்குடிலுக்கு
3. குடிலில் அற்புதத்தை ஆறுமுகன் யான்
குறைவில்லா நடத்தி வருக
தேடிவந்து அரங்கன் திருவடி பற்றி
தேசிகன்பால் தீட்சை பெறும் மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் ஞானம் பெறுவது உறுதி
மரணத்தை வெல்வதும் உறுதி உறுதி
தேக்கமின்றி ஆன்மீக உயர் ஞான வழியை
தேசிகன் உலகோர் அடையும் பொருட்டு அறமாக சன்மார்க்கமாக
5. ஆகவே உலகோர்க்கு அருளிவர
அகிலத்தார் ஏற்று சரணடைந்தால்
ஜெகமே ஞான யுகமாகும்
ஜெகமெல்லாம் ஞான ஆட்சி உருவாகும்
6. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தார் தொடர்ந்து வரவேண்டும்
வகையான அரங்கன் தர்மத்தை
வழிமொழிந்து உலகமெல்லாம் செய்ய வேண்டும்

7. வேண்டி இந்த சேவைதனை விரைந்து
வினவிட உலகெல்லாம் செய்து வர
உண்டாகும் அரங்கன் வழி உயர் ஞான ஆட்சி
உலகோர்க்கு பாதுகாப்புமிக்க தர்ம ஆட்சியாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–